Registered as a News paper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு
EELA NADU

போன் 399 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 1

மலர் 5 யாழ்ப்பாணம் சோபகிருது தை 25 ஆம் நாள் றம்ழான் 22 (7-2-64) வெள்ளிக்கிழமை இதழ் 361

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

	வாரப்பதிப்பு உட்பட	வாரப்பதிப்பு மட்டும்
1 வருடம்	48-00	13-00
6 மாதம்	25-00	6-50
3 மாதம்	13-00	3-25

ஜவுளிகளைப் பறிமுதல் செய்ய புதிய சட்டம்

பதுக்கல், கொள்ளை லாபத்தை தடுக்க நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

துணிகளைப் பதுக்கிவைக்கும் அல்லது துணியின் விலைகளை வேண்டுமென்றே அதிகரிக்கும் தனிப்பட்ட வர்த்தகர்களிடம் உள்ள துணிகளை அரசாங்கம் பறிமுதல் செய்யும் துணிகளின் விலைகளை வேண்டுமென்றே உயர்த்தும் அல்லது துணிகளைப் பதுக்கும் வர்த்தகர்களுக்குச் சொந்தமான ஜவுளிகளை பறிமுதல் செய்யவேண்டுமென நேற்று நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதற்கான வர்த்தகச் சட்டத்திருத்தத்தை வர்த்தக மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா பார்லிமெண்ட் கூடும் பொழுது கொண்டு வருவார்.

இப்பொழுதுள்ள வர்த்தகச் சட்டத்தின் படி விலைகளைக் கட்டுப்படுத்த முடியுமேதவிர ஜவுளிகளைப் பறிமுதல் செய்யும் அதிகாரம் அரசாங்கத்துக்கு இல்லை. பங்கீட்டரிசிக் கூப்பனுக்கு ஜவுளி வழங்குவதென அரசாங்கம் செய்துள்ள தீர்மானத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள தனிப்பட்ட வர்த்தகர் முயற்சி செய்யக் கூடுமெனபதாலேயே இச்சட்டம் கொண்டுவரப்படுகிறது.

ஐந்து மாதங்களுக்கு நான்கு யார் துணி

கூப்பனுக்கு வழங்க அரசாங்கம் முடிவு

கொழும்பு, வியாழன்

எதிர்வரும் ஜூன் மாதம் வரையும் ஒருவருக்கு 4 யார் துணி மட்டும் கூப்பனுக்கு வழங்கப்படும். கூப்பன் கடைகளில் இந்த 4 யார் துணியும், கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் விநியோக வேலைகள் முடிவடைந்ததும் ஜூன் மாதத்துக்கிடையில் எப்பொழுதாவது வழங்கப்படும்.

இப்பொழுதுள்ள 40,000,000 யார் துணிகளையும் மக்களுக்குச் சமமாகப் பங்கிடும் பொருட்டுக் கூப்பனுக்கு 4 யார் வழங்குவதென்று நேற்று நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள 4,500 ஐக்கிய பண்டசாலைகள் மூலமும், 100 கூட்டுறவுக் கடைகள் மூலமும், கூ. மொ. வி. ஸ்தாபனத்தால் நடாத்தப்படும் 90 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும் இத்துணி வழங்கப்படும்.

ஒருவர் தனது அரிசிக்கூப்பனைக் கொடுத்தே இந்த 4 யார் துணியையும் தாம் கூப்பன் அரிசி வாங்கும் கடையில் துணிவகை விற்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட காலத்தில் வாங்கிக்கொள்ளலாம். அரிசிக் கூப்பனில் உள்ள 104-ம் இலக்கக் கூப்பனைக் கொடு

(5-ம் பக்கம் பார்க்க)

பெரியோர்களே! பெருமக்களே!!

யாழ்ப்பாண மக்களின் அபிமானம் பெற்ற வைத்தியப் பெருந்தகை டாக்டர் S. சுப்பிரமணியம் (பி. எஸ்.) அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து நடாத்துதற்கு நாம் முன்வந்துள்ளோம்.

புகழ்பெற்ற தொய்வு நோய் மருந்தும் சகல நோய் நிவாரண மருந்துவகைகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு முறை விஜயஞ்செய்யுங்கள்.

இளைப்பாறிய வைத்திய அதிகாரியின் ஆலோசனை எப்பொழுதும் உண்டு.

P. S. DISPENSARY

75, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
75, Power House Road, Jaffna.

‘ஆசியமாணவன்’ சஞ்சிகைக்கு தடை?

கொள்ளுப்பிட்டி, வியா.

இலங்கையில் ‘ஆசிய பவுண்டேஷன்’ ஸ்தாபனத்தினால் இலவசமாக விநியோகிக்கப்படும் “ஆசிய மாணவன்” என்னும் ஆங்கில அமெரிக்க மாத சஞ்சிகையின் சென்ற மாத பிரதிகள் சங்க இலாகாவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. நிக்கவரெட்டியா உபதேர்தல் முடிவும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் பற்றியும், நாட்டின் நிதி நிலைமை பற்றியும் இந்த சஞ்சிகையில் கட்டுரைகள் வெளியாகியுள்ளதாகவும் இதுவே இந்த சஞ்சிகையின் 500 பிரதிகளும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்றும் அறியப்படுகிறது.

இ. போ. ச. மரியாதை வாரம்

நல்லூர், வெள்ளி

இலங்கை போக்குவரத்து சபை கடந்தமாதம் நடத்திய “மரியாதை மாதம்” பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளதாக இ. போ. ச. அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனவரிமாதத்தில் இ. போ. ச. ஊழியர்களில் பொதுமக்களின் நன்மதிப்பைப பெற்றவர்களுக்கு சிறந்த ஊழியர் என்ற கௌரவம் அளிக்கபபடவிருக்கின்றது. மரியாதைக் குறைவானசெயல்களிலீடுபட்ட ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் இ. போ. சபை முடிவுசெய்துள்ளது.

அரசாங்க சேவையில் நீடிக்க ஊழியருக்கு சலுகை

ஓய்வு மனுப்பத்திரங்கள் வாபஸ்பெறலாம்?

கொழும்பு, வியாழன்

அரசகரும மொழியில் தேர்ச்சி பெறாதவர்களுக்கு மேலும் இரு வருடகால அவகாசம் கொடுப்பதென அரசாங்கம் தீர்மானிப்பதற்குமுன் தமது சேவைக்கான முன்னறிவித்தல் பத்திரங்களைச் சமர்ப்பித்த அரசாங்க சேவை ஊழியர் தாம் சமர்ப்பித்த இந்த முன்னறிவித்தல் பத்திரங்களை வாபஸ் பெறக்கூடிய வாய்ப்பளிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

அரசகரும மொழிச் சட்டத்தின்கீழ் ஓய்வு பெறுவதற்கு முன்னறிவித்தல் கொடுத்த

(6-ம் பக்கம் பார்க்க)

பிரபல சமூக சேவகி

ராஜ்குமாரி அமிர்தகௌரி டில்லியில் காலமானார்

முன்னாள் மத்திய மந்திரி

புதுடில்லி, பெப். 6

ஸ்ரீமதி ராஜ்குமாரி அமிர்த கௌரி இன்று காலை புதுடில்லியில் காலமானார். அவருக்கு வயது 77. அதிகாலை 3-30 மணிக்கு அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் மரணமானார்.

இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நினைவுப் பிரார்த்தனை ஒன்று நடைபெற்றது. 3-30 மணிக்கு பிரேதம் ஊர்வலமாக நிகம்போத் காட் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

ஸ்ரீமதி ராஜ்குமாரியின் மரணச் செய்தி தம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தி விட்டதாக உப ஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுசெய்ன் கூறினார். பெருமைவாய்ந்த பிரபுத்துவ குடும்பத்தில் பிறந்த அவர், ஏழை மக்களின் சேவைக்காகத் தம்மை அர்ப்பணித்திருந்தார் என்றும், காந்திஜியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் என்றும், இந்தியாவின் முதலாவது சுகாதார மந்திரியாகவிருந்து சமூகத்துறையில் பல அரிய சாதனைகள் புரிந்துள்ளார் என்றும், இம்மாபெரும் தியாகியின் மரணத்திற்குத் துக்கம் அனுஷ்டிப்பதாயும் உபஜனாதிபதி கூறினார்.

இன்று காலை உபஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுசெய்னும், சுகாதார மந்திரி ஸ்ரீமதி சுசீலா நய்யாரும், மற்றும் ஆயிரக்கணக்கான மக்களும் ராஜ்குமாரியின் இல்லத்திற்குச் சென்று தங்கள் இறுதி

(5-ம் பக்கம் பார்க்க)

ஆங்கில கால்வாய்க்கு கீழாக சுரங்க ரயில் பாதை!

லண்டன், பெப். 6

ஆங்கிலக்கால்வாய்க்குக் கீழாக சுரங்க ரயில் பாதையை அமைக்க பிரிட்டிஷ், பிரான்ஸ் நிபுணர்கள் திட்டமிட்டுள்ளனர். 32 மைல் நீளமுள்ள இந்த ரயில் பாதையை அமைத்து முடிக்க ஆறு வருடம் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் பற்றிய நிதி சம்பந்தமாக பிரிட்டிஷ்-பிரான்ஸ் நிபுணர்கள் இப்போது ஆராய்ந்துவருகிறார்கள்.

மணிவாக்கு

அவரவருடைய இயல்புகளை அறிந்து அவரவர்க்குப் பொருந்துமாறு செய்யாவிட்டால், நன்மைசெய்வதிலும் தவறு உண்டாகும்.

—திருவள்ளுவர்.

ஈழநாடு
EELA NADU
ELANADU: National Tami
Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jattna
Phone 589

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு
தை மீ 25 உ (7-2-64)

சைப்ரஸ் சம்பவங்கள்

சைப்ரஸில் மீண்டும் வகுப்புக் கலங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பலாத்கார சம்பவங்கள் நடைபெற்றுள்ளதுடன் அங்குள்ள அமெரிக்கத் தூதரகக்கட்டிடம் வெடிகுண்டு வைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. அங்கு அமைதியை நிலைநாட்டவும் ஐக்கியத்தை ஏற்படுத்தவும் அதிபர் ஆர்ச்பிஷப் மக்காரியஸ் பெரும் முயற்சி செய்து வருகிறார். சைப்ரஸ் தீவு பல கஷ்டங்களை அனுபவித்து, உயிர்த்தியாகஞ் செய்து விடுதலையடைந்தது. அங்குள்ள இரு பெரும் சமூகங்களான கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட அரசியல் வேற்றுமைகள் பலாத்கார சம்பவங்களுக்கு வழி வகுத்து விட்டது வருந்தத்தக்கது.

சைப்ரஸில் அமைதியை நிலைநாட்டுவதற்கும் நிரந்தர சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும் 'சர்வதேசப்படை' யொன்றை நிறுத்தலாமென்றும் பத்தாயிரம் போர் வீரர்களைக் கொண்ட இந்தப் படையை வட அத்லாந்திக் பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனம் எனப்படும் 'நேட்டோ, நாடுகளிலிருந்து திரட்டலாமென்றும் அமெரிக்காவும் பிரிட்டனும் தெரிவித்த யோசனையை கிரேக்க, துருக்கி வெளிவிவகார மந்திரிகள் ஒப்புக் கொண்டனர். இந்த யோசனையை சைப்ரஸ் அதிபர் ஆர்ச் பிஷப் மக்காரியஸ் கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட போதிலும் சமாதானத்தை நிலைநாட்டவரும் சர்வதேசப்படை ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கட்டுப்பாட்டின் கீழிருக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்,

பாதுகாப்புச் சபையின் கட்டுப்பாட்டின் கீழிருப்பதே பொருத்தம். காங்கோ மற்றும் இடங்களுக்கு அனுப்பப்பட்டது போல் ஐ. நா.வே சர்வதேசப்படை யொன்றை சைப்ரஸுக்கு சமாதானத்தை நிலைநாட்ட அனுப்புவதுதான் மிகப் பொருத்தமும் நியயமும் வேறு எந்தப்படை சென்றாலும் அது ஐ. நா. வின் கட்டுப்பாட்டின் கீழிருப்பது தான் வேறு புதிய பிரச்னைகளைக் கிளப்பாமலிருக்கும்.

இரு சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள சண்டை இரு நாடுகளுக்கிடையில் யுத்தத்தை ஏற்படுத்தி வல்லரசுகளின் தலையீட்டினால் உலகயுத்தமாகவும் மாறக்கூடிய அபாயமேற்படும், சமூகச் சண்டை சைப்ரஸில் அமைதியின்மையை ஏற்படுத்துவதுடன் நில்லாது உலக அமைதியையே சீர்குலைக்கவும் கூடும். எந்த நாட்டுப்படைகள் சென்றாலும் அங்கு இரு சமூகத்தவர்களுக்கிடையிலும் நிரந்தரமான சமாதானத்தையோ அமைதியையோ ஏற்படுத்திவிட முடியுமென எண்ண முடியாது.

இதை உணர்ந்துதான் "ஆயுதத்தினால் அமைதியை ஏற்படுத்திவிட முடியாது. வேற்றுமைகளை சமாதானமான முறையில்தான் தீர்க்க வேண்டும்" என்று ஆர்ச் பிஷப் வேண்டுகோள் விடுத்துள்ளார். இரு சமூகத்தினருக்குமிடையில் சமாதானம் ஏற்படுவதற்கு இருதரப்பினரும் கலந்து வாழும் பகுதிகளில் சமாதானக் கமிஷன்கள் நிறுவி கருத்து வேற்றுமைகளையும் பிரச்னைகளையும் தீர்க்க முயற்சி செய்யவேண்டுமென்றும் ஆர்ச் பிஷப் நல்ல யோசனை தெரிவித்துள்ளார்

அந்நிய நாட்டுப் படைகள் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கென சைப்ரஸுக்குள் வந்தாலும் அவைகளினால் நாடு பெற்ற சுதந்திரம் பறிபோய் விடக் கூடுமென அஞ்சியே அவர் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அவரது கோரிக்கைக்குச் செவிசாய்த்து நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாத்து நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டியதும் தங்களுக்கிடையிலுள்ள வேற்றுமைகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டியதும் கிரேக்க, துருக்கிய சமூக மக்களினது கடமையாகும். இதே சமயம் இரு சமூகத்தினருக்கும் சம உரிமைகள் வழங்கி அவர்கள் சமாதானமாக சகோதரர்கள் போல் தொடர்ந்து வாழ்வதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டியதும் அந்த நாட்டு அரசாங்கத்தினது கடமையாகும். சைப்ரஸ் சம்பவங்கள் இலங்கை உள்ளிட்டு புதிதாக விடுதலையடைந்த ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு ஒரு படிப்பினையாக இருக்க வேண்டும். இல்லையேல் "நாட்டை ஆட்சி செய்ய அவர்களுக்குத் தெரியாது" என்ற ஆங்கிலேயரின் கூற்று உண்மையாகிவிடும்.

துறைமுகத்தில் பொலிஸ் காவல்

கொழும்பு, புதன்

கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்றுவரும் திருட்டுக்களை தடை செய்வதற்காகத் துறைமுகத்தின் இரு முகப்புகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் காவல்புரிந்து வருகின்றனர். இரவு நேரங்களில், மீன்பிடிக்க உபயோகிக்கப்படும் இயந்திரப்படகுகளில் வந்து பொருள் வைப்பு நிலையத்திலிருந்து துணிவகை போன்ற பொருட்கள் திருடப்பட்டதைத் தொடர்ந்தே இவ்வித பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக துறைமுக கார்ப்பரேஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட் - சுதந்திரா கட்சியினர் மோதல்

தூத்துக்குடி, பெப். 6

தூத்துக்குடியில் சுதந்திரக் கட்சியினருக்கும் பொதுவுடைமைக்கட்சியினருக்கு மிடையே மோதல் ஏற்பட்டதன் பலனாக தேர்தல் அலுவலகத்திலிருந்த ராஜாஜி, உ. முத்துராமலிங்கத்தேவர் ஆகியோரின் படங்கள் உடைத்தெறியப்பட்டன.

இந்நகரில் பொதுவுடைமைக் கட்சி - காங்கிரஸ் கட்சிக்கிடையே கூட்டு ஏற்பாடும், சுதந்திரக்கட்சி- தி. மு க.வுக்குமிடையே கூட்டு ஏற்பாடும் இருந்துவருகிறது.

தேர்தல் அலுவலகத்தில் சுதந்திரக்கட்சி, தி மு. க. ஊழியர்கள் படுத்திருந்த சமயம், நள்ளிரவில் 50 பொதுவுடைமைக் கட்சியினர் வந்து திடீரென அங்கிருந்தவர்களை அடித்ததுடன், ராஜாஜி, தேவர் ஆகியோரின் படங்களை உடைத்தெறிந்தனராம்.

இருசாராரும் பொலிசில் புகார் செய்துள்ளனர்.

நாவாந்துறையில் கென்னடி வீதி

யாழ்ப்பாணம், வியாழன்

நாவாந்துறையிலிருக்கும் சேமக்காலை விதிக்கு கென்னடி வீதியெனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதையொட்டிய வைபவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெற்றது. நாவாந்துறை வட்டார அங்கத்தவர் திரு. நீ. அந்தோணி புதிய வீதியின் பெயர் எழுதப்பட்டிருந்த பலகையிலுள்ள திரையை நீக்கினார். இவ்வைபவத்துக்கு திரு. த. குருசமூர்த்து தலைமை தாங்கினார்.

இதைத் தொடர்ந்து யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராஜாவுக்கும் நாவாந்துறை வட்டார அங்கத்தவருக்கும் வரவேற்புக் கூட்டமொன்று நடைபெற்றது.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு மேயர் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

நாவாந்துறை யாழ்ப்பாண நகரிலே மிகவும் பின்தங்கிய கிராமமாக இருக்கிறது. இக்கிராம மக்கள் கிராமத்தை முன்னேற்றவேண்டுமென இன்னும் முயற்சி செய்திருந்தால் நாவாந்துறை நல்ல முன்னேற்றமடைந்திருக்கும்.

மக்கள் தமக்குத் தேவையானவற்றை வட்டார அங்கத்தவருக்குத் தெரிவிப்பதன் மூலம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம்

இப்பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் வசதியில்லை என்பதை அறிந்து அண்மையில் இக்குறையை நிவிர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தேன்.

நாவாந்துறை வட்டார அங்கத்தவர் திரு. அந்தோணி பேசுகையில் நாவாந்துறைப் பகுதிக்கு மின்சார சப்ளை போதாதென்றும் வீதிக்கான புதுப் பெயர் சூட்டு வைபவத்துக்கு அமெரிக்க தகவல் பகுதி சினிமாச் செய்திப் படமொன்றைக் காட்டத் தீர்மானித்திருந்ததென்றும் மின்சார விநியோகம் போதாமையால் அவ்விதம் காட்ட முடியாது போய்விட்டதாகவும் தெரிவித்து இந்த நிலையை சீராக்க மேயர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கூட்டத்தில் மற்றும் பலரும் பேசினர்.

காமன்வெல்த் குடியேற்றம்

லண்டன், பெப். 6

பிரிட்டன், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் காமன்வெல்த் குடியேற்றத்தை அனுமதிக்க முடியாது என பிரதமர் சர் அலெக் டக்ளஸ் ஹியூம் கூறினார்.

விசேஷத் தகுதியற்ற, ஆங்கில அறிவுமில்லாத பெருந் தொகையானோர் கடந்த 12 மாதங்களில் இந்தியாவிலிருந்தும், பாகிஸ்தானிலிருந்தும் குடியேறியிருப்பதாக டேவிட் ரெண்டன் என்ற கன்சர்வேட்டிவ் அங்கத்தினர் கூறினர்.

மிருதங்க வித்வானுக்கு பட்டமளிப்பு வைபவம்

நல்லூர், வெள்ளி

மிருதங்க வித்துவான் சங்கீத பூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதனின் கலைப்பணியைப் பாராட்டி கணேசையர் தமிழ்ச் சங்கம் அவருக்கு 'லய ஞான சிரோமணி' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

சங்கீதபூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதன் பாராட்டு விழாவும், விஸ்வப்பிரமஸ்ரீ க. ப. சின்னராசாவின் மிருதங்க அரங்கேற்றமும் சங்கீத வித்வபூஷணம் திரு. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர் தலைமையில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கம்பன் கலைக்கழகம் நடாத்திய இந்த விழாவில் கலையரசு க. சொர்ணலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

திரு. இராமநாதன், தாம் நன்றாக வாசிப்பதுடன் வாசிக்கக்கூடியவர்களையும் உருவாக்குவதில் திறமை மிக்கவர். மிருதங்கக் கலை முன்னர் பரம்பரைத் தொழிலாக இருந்தது. இப்போது பலரும் இதனைப் பழகுகின்றார்கள். எந்த வித்துவானும் தான் மிருதங்கம் வாசிக்கு முன் தனது குருவை மனத்தில் நினைத்து வணங்க வேண்டும்.

காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் திரு. மு. திடவீரசிங்கம் விழாவைத் தொடக்கிவைத்துப் பேசினார். திரு. இராமநாதனுக்கு இசையாசிரியரும், நாதசுர வித்துவானுமான திரு. என். எஸ. உருத்திராபதி பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

திருவாளர்கள் பி. சோமசுந்தரம், பி. முத்துக்குமாரு, என். ஆர். சின்னராசா, இசைமணி எம். ஆனந்தசிவம் ஆகியோரும், கலைவாணர் நாடக மன்றம், இலங்கை இசைத் தமிழ் மன்றம், செல்லம்ஸ் புகைப்பட ஸ்தாபனப் பிரதிநிதிகளும் பாராட்டுரை வழங்கினர்.

திரு. எஸ. ஆர். ஞானசுந்தரம் திரு. இராமநாதனுக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கியதுடன் நன்றி கூறினர். திரு. இராமநாதன் தமக்களித்த கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

சங்கீதபூஷணம் எஸ். பாலசிங்கத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.

ஆசிரியருக்குக் கடிதம்

தைமாதமே சிவராத்திரி

இவ்விலங்காதீபத்திலே, சைவசமய முறைப்படி பூஜைகளையும் விரதங்களையும் அனுட்டித்து வருவதற்காகப் பஞ்சாங்கங்கள் திருக்கணிதம் என்றும், வாக்கியம் என்றும் இரண்டுமுறையாகத் தொன்றுதொட்டு வழமையாக, அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. அதன்பிரகாரமே நாங்கள் அனைவரும் விரதநியமங்களையும், உற்சவங்களையும், கும்பாபிஷேக முகூர்த்தங்களையும் இன்னும் எம் குடும்பத்திற்குரிய விவாகம் முதலிய சகல கிரியைகளையும் அனுசரித்து வருகின்றோம். எம் முன்னோராகிய பெரியோர்களும் அறிவாளிகளும், ஆறுமுகநாவலர் முதலிய பெரிய அறிஞர்களும் இப்போது நடைமுறையிலிருக்கும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கத்தையே அனுசரித்துவந்துள்ளார்கள். அவ்வாறாகிய பெரியோர்களின் வழியைப் பின்பற்றி அனுசரித்து வாழ்வது நமது கடமையாகும். காலபேதத்தால் அவைகளில் சில மாறுதல்கள் ஏற்பட்டாலும் அவைகள் எம் முன்னோரது அனுசரிப்பில் உள்ளவை என்ற காரணத்தால் புறக்கணிக்காது, நம்பிக்கையோடு அப் பஞ்சாங்கத்தில், குறித்தபடியே எல்லா விஷயங்களையும் அனுசரித்து வருகின்றோம்,

அதன்பின் கும்பகோண மடத்திலிருந்து சங்கராச்சாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்ட திருக்கணித பஞ்சாங்கத்தையும், சிலர் கைக்கொண்டுவந்திருக்கின்றார்கள் கும்பகோணமடம் சேர்ந்திருக்கும் ஒரு சபையினது அனுசரணையைக்கொண்டதும், ஒரு பெரியாரால் தோற்றுவிக்கப்பட்டதும் ஆனதால் அதனையும் சிலர் விரும்பி ஏற்றனர்.

இவ்விரு பஞ்சாங்கங்களும் இச் சோபகிருது வருஷத்தில் புரட்டாதி மாதத்தில் வரவேண்டிய நவராத்திரியை ஐப்பசி மாதத்திலும், ஐப்பசி மாதத்தில் வரவேண்டிய ஸ்கந்த சஷ்டியைக் கார்த்திகை மாதத்திலும் தீபாவளியைப் புரட்டாதி மாதத்திலும் கேதார கௌரி விரதத்தை ஐப்பசி மாதத்தின் முன்னும் பின்னுமாகவும் நிர்ணயித்து நம் சைவ மதத்தவர் எல்லோரும் ஏற்றுக் கைக்கொண்டுவந்திருக்கிறார்கள். இவ்விரு பஞ்சாங்கங்களும் இத் தை மாதம் 29-ம் திகதி செவ்வாய்க் கிழமை என்று நிர்ணயித்துள்ளன. அதன்படி கொள்ளக்கூடாதென்றும் மாசிமாதம் 29-ம் திகதியே கொள்ளவேண்டுமென்றும் சில குருமாரும் மற்றும் சிலரும் இச் சிவராத்திரியை மாற்றிவிட நினைக்கிறார்கள். முன்கூறிய புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நிகழப்பெற்ற அந்த விசேஷ காலங்களை ஏன் மாற்ற நினைக்கவில்லை? அதற்கு மௌனம் சாதித்தது ஏனோ?...

'எம் முன்னோரும் அக்காலத்துப் பெரிய மேதாவிகளும், வர இருஷி முனிவரால் உண்டாக்கப்பெற்ற வாக்கிய பஞ்சாங்கத்தையும் எமது பழைய அனுசரணையையும் கொண்டு நடப்பதே உசிதமாகும். அவற்றைத்தட்டி வீழ்த்திவிட்டு, ஒவ்வொரு மூலை முடக்குகளிலிருந்து எழுபவற்றை நம்பி, நாம் ஏமாந்துபோகக்கூடாது. நாம் பிறந்ததும் வளர்ந்ததும்,எமது வீட்டுக்கிரியை, ஆலயக்கிரியை, மகோற்சவம், பிரதிஷ்டை, தீட்சை முதலியவைகளையும் அப் பஞ்சாங்கங்களின் துணைகொண்டே நடாத்திவந்துள்ளோம். தற்போது இச் சிவராத்திரி விஷயத்திற்காக, அப் பஞ்சாங்கங்களைத் தட்டிவீழ்த்திவிட்டு முற் கூறிய விஷயங்களை நடாத்துவது எப்படி? எனவே சிவராத்திரி விஷயத்திற்கு ஒரு சபையைக் கூட்டி, அதன்மூலம் பல அறிஞரையும் அழைத்து, அவ்விடத்தே, தம் கொள்கையை நிலைநாட்டியிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

நாம் அதன்படி நடக்கலாம். ஆதலால் நாங்கள் எதிர்வரும் தைமாதம் 29-ந் திகதியில், தொன்றுதொட்டுப் பஞ்சாங்கத்தில்கொண்ட நம்பிக்கை சிறிதும்குன்றாது. சிவராத்திரியை அனுசரித்துவிட்டுப் பின்பு சபையைக்கூட்டுவோம். அறிவிற் சிறந்த பெரியோர்களையும் சோதிட விற்பன்னர்களையும் ஆகம, புராண விற்பன்னர்களையும் இந்தியாவிலுள்ள பன்நூலறிஞர்களையும் அழைத்து பகிரங்கமான ஒரு பெரிய சபையைக்கூட்டி, அதில் முற்கூறிய விரத நியமங்களின் திட்டங்களையும் அச் சபையாரது தீர்மானப்படி கேட்டு நடப்பதே தக்கமுறையாகும். ஆதலால் தைமாதம் 29-ந் திகதியே சிவராத்திரியை வழமையாக, முன் அனுசரித்துவந்ததுபோல் பஞ்சாங்கங்களின் முறைப்படி இம்முறையும் அனுசரிக்கவேண்டும்.

இந்துசமயாபிமானி

கச்சேரி நல்லூர்வீதி,
யாழ்ப்பாணம்.

“காஷ்மீரில் சர்வஜன வாக்குரிமைக்கு இந்தியா ஒருபோதும் இணங்காது”

ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியப் பிரதிநிதி சாக்ளா உரை

கூட்டம் சனிக்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டது

நியூயோர்க், பெப். 6

காஷ்மீரில் நடைபெற்ற மூன்று தேர்தல்களிலும், இந்தியாவுடன் இணையும் விருப்பத்தை மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்றும், எந்தக் கட்டத்திலும் அங்கு சர்வஜனவாக்குரிமை நடத்த ஒரு போதும் இணங்க முடியாதென்பதை தெளிவுபடுத்த விரும்புவதாகவும் ஐ. நா. பாதுகாப்பு சபையில் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி பூட்டோவின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்துப் பேசிய இந்தியப் பிரதிநிதி திரு. எம். ஸி. சாக்ளா கூறினார்.

“ஐ. நா. தீர்மானத்திற் இணங்க பாகிஸ்தான் அங்கு ஆக்கிரமிப்பை காலி செய்ய வேண்டும். எங்களைக் கட்டுப்படுத்தும் பாதுகாப்பு சபையின் எந்தத் தீர்மானத்திற்கும் இந்தியா இணங்க முடியாது. பாகிஸ்தானின் பயமுறுத்தலுக்கும் பணிந்துவிட முடியாது” என்றும் திரு. சாக்ளா கூறினார்.

“இந்தியாவின் எந்த அரசாங்கமும் தனது பிரதேசத்தை எவருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது. கல்கத்தாவையும், பம்பாயையும் போல காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே” என்றும் அவர் தொடர்ந்து கூறினார்.

திரு. சாக்ளா 2 மணிநேரம் உரை நிகழ்த்தியபின் பாதுகாப்புசபைக் கூட்டம் அடுத்த சனிக்கிழமை காலைவரை ஒத்திவைக்கப்பட்டது. இந்தியப் பிரதிநிதி தமது உரையில் மேலும் கூறியதாவது:

“பாதுகாப்பு சபையைக் கூட்டுவதற்கு எவ்விதக் காரணமும் இல்லை. காஷ்மீர் நிலைமையில் புதிதாக எதுவும் நடந்துவிடவில்லை. இந்தியா மீது பாகிஸ்தான் கொண்டுள்ள வெறுப்புணர்ச்சியே பாதுகாப்பு சபையைக் கூட்டுமாறு அது கோரியதற்கு காரணம். காஷ்மீரில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள பாகிஸ்தானுக்கு பாதுகாப்பு சபைக்கு இவ்விஷயத்தை எடுத்துச்சொல்லும் உரிமை கிடையாது.

காஷ்மீரில் ஏற்பட்ட மலை ஜாதியினர் படையெடுப்பு, இந்தியாவை உதவிக்கழைக்கும் நிர்ப்பந்தத்தை காஷ்மீர் மன்னருக்கு ஏற்படுத்தியது.

காஷ்மீரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக் கோரும் பாகிஸ்தான் ஜனநாயகக் கோட்பாடுகளில் நம்பிக்கை கிடையாது. பிறருக்கு அதை உபதேசிக்கும் முன், தன்சொந்த நாட்டில் அது தேர்தல்களை நடத்த முன்வரவேண்டும்.”

பாதுகாப்புச் சபை, தீர்மானம் எதையும் நிறைவேற்றுவதின் மூலம் பிரச்னையைத் தீர்க்க முடியாது. பாகிஸ்தானுடன் ஒற்றுமையாகவும், ஐக்கியமாகவும் இருக்க இந்தியா தொடர்ந்து பாடுபடும்.

இரு நாடுகளின் நிலைமை பற்றி இரு நாட்டு மந்திரிகளும் சந்தித்துப் பேசுவது உதவியாக இருக்கும். பாகிஸ்தானுடன் அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள இந்தியா பலமுறை விருப்பம் தெரிவித்திருக்கிறது. பாகிஸ்தான் இத்தகைய ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதின் மூலமே அபாயத்தை தவிர்க்க முடியும்.

காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் முயற்சி முற்றும் உள்நாட்டுப் பிரச்னையாகும். அங்கு புனிதச் சின்னம் மறைந்ததை, பாகிஸ்தான் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த

(4-ம் பக்கம் பார்க்க)

அதிக நாடுகளைக் கொண்ட மண்டல சார்பற்ற மகாநாடு

யூகோ, இந்தியா கருத்தொற்றுமை

பெல்கிரேட், பெப். 6

உத்தேச மண்டலசார்பற்ற மகாநாட்டில் அதிக நாடுகள் கலந்து கொள்ளவேண்டுமென்ற யூகோஸ்லேவியாவின் கருத்தை இந்தியா வரவேற்பதாக இந்திய உதவி வெளிநாட்டு மந்திரி திரு. தினேஷ் சிங் பெல்கிரேட்டில் கூறினார். ஜனாதிபதி டிட்டோவுடனும், இதர யூகோ தலைவர்களுடனும் தாம் நடத்திய பேச்சுக்கள் பூரண திருப்தியளிப்பதாக அவர் கூறினார்.

உத்தேச மகாநாட்டில் பின்லாந்து, ஆஸ்திரியா, சுவிடன் ஆகிய ஐரோப்பிய நாடுகளும், பிரேஸில், பொலிவியா, சிலி, மெக்ஸிகோ ஆகிய லத்தீன் அமெரிக்க நாடுகளும், மற்றும் பல ஆபிரிக்க நாடுகளும் பங்குபற்றிக்கொள்ள வேண்டுமென யூகோஸ்லேவியா விரும்புவதாகக் கூறப்படுகிறது.

1961-ம் ஆண்டு பெல்கிரேட்டில் நடைபெற்ற மண்டலசார்பற்ற மகாநாட்டில் 25 நாடுகள் கலந்துகொண்டன. மகாநாட்டில் பங்குபற்றிய ஒரே ஐரோப்பியநாடு யூகோஸ்லேவியா மட்டுமே.

ஆசிய-ஆபிரிக்கமகாநாட்டை நடத்த சீனப் பிரதமர்மேற்கொண்டிருக்கும் முயற்சியை முறியடிக்குமுகமாக, எவ்வளவு விரைவில் முடியுமே அவ்வளவு விரைவில் மண்டலசார்பற்ற மகாநாட்டைக் கூட்டவேண்டுமென யூகோஸ்லேவியா விரும்புவதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீமதி இந்திராகாந்தி வெளிநாட்டு மந்திரியாவார்?

புதுடில்லி, பெப். 6

பிரதமர் நேருவின் புதல்வி ஸ்ரீமதி இந்திராகாந்தியை இந்தியாவின் வெளிநாட்டு மந்திரியாக நியமிப்பதுபற்றி, காங்கிரஸ் உயர் வட்டாரங்களில் முயற்சிகள் நடப்பதாக “டைம்ஸ் ஆப் இந்தியா” பத்திரிகை கூறியது.

அவரை வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கவேண்டுமென்பதை ஆதரிக்கும் காங்கிரஸ் தலைவர்களில், அக்ராசனர் காமராஜரும் ஒருவர் என அது அறிவித்தது.

வெளிநாட்டு மந்திரி பதவியை வகிப்பதற்கு மிகவும் தகுதிபெற்றவர் ஸ்ரீமதி காந்திதான் என காங்கிரஸ் வட்டாரங்களில் பொதுவாகக் கருதப்படுவதாகவும், அவரது சொந்த அனுபவமும், தன் தந்தையுடன் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பும் வெளிநாட்டு விவகாரத்தில் தற்போதைய கொள்கையைப் பின்பற்றுவதுடன் தொடர்ந்து உபயோகமான வழிகாட்டும் தகுதியையும் அவருக்களித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீமதி காந்தி பல ஆண்டுகளாகவே பிரதமமந்திரியின் பிரதான நம்பிக்கையைப் பெற்று, அவரது கொள்கைகளைச் சரியாக வியாக்கியானம் செய்வதில் வல்லவராக விளங்கிவருகிறார் என்றும் கூறப்பட்டது.

ஷேக்ஸ்பியரின் 400வது பிறந்த தினவிழா

இந்தியா 1000 பவுன் நன்கொடை

லண்டன், பெப். 6

பிரிட்டிஷ் மக்கள் உலக மகாகவிஞர் ஷேக்ஸ்பியரின் 400-வது பிறந்தநாள் விழாவை, இவ்வாண்டு சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதன் ஒரு அம்சமாக அவரது பிறந்தவூரான ஸ்டிராட்போர்ட்-ஆன்-ஏவன் நகரில் ஏப்ரல் 23-ந் திகதி ஷேக்ஸ்பியர் கேந்திரம் ஒன்று திறக்கப்படும்.

ஆகஸ்ட் 30-ம் திகதிமுதல் செப்டம்பர் 4-ம் திகதிவரை அங்கு நடைபெறவிருக்கும் சர்வதேச ஷேக்ஸ்பியர் மகாநாட்டில் உலகின் பலபகுதிகளைச் சேர்ந்த புலவர்கள் கலந்துகொள்வார்கள்.

மார்ச் மாதம் லண்டனிலுள்ள ஆல்ட்விச் தியேட்டரில் ஷேக்ஸ்பியர் நாடக விழா தொடங்குகிறது. 8 மாதகாலம் இவ்விழா நடைபெறும்.

ஸ்ட்ராட்போர்ட் ஆன்-ஏவனில் ஏற்படும் புதிய கேந்திரத்தில் ஷேக்ஸ்பியர் அறக்கட்டளையின் தலைமையகம் நிறுவப்படும். இதை நிறுவ பல நாடுகள் பொன்னும், பொருளும் கொடுத்துதவியிருக்கின்றன.

இந்திய அரசாங்கம் இதற்கு 1000 பவுன்கள் கொடையாக வழங்கியிருக்கிறது. சுமார் 80,000 பவுன் செலவில் ஷேக்ஸ்பியர் கேந்திரம் நிறுவப்படும்.

காஷ்மீரில்

எல்லைக்கோட்டை தாண்டுமாறு பாக். பத்திரிகைகள் வற்புறுத்து

புனிதச் சின்னம் பார்வைக்கு வைக்கப்பட்டது

ஸ்ரீநகர், பெப். 6

காஷ்மீரில் மீட்கப்பட்ட புனித சின்னம் இன்று பொது மக்கள் தரிசனத்துக்கு வைக்கப்பட்டது.

அதேசமயம் பாகிஸ்தான் பத்திரிகைகள் இப்போது பகைப் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாயும், ஜீஹாத் கோஷத்துடன் காஷ்மீர் எல்லைக் கோட்டைத் தாண்டும்படி எழுதிவருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

காஷ்மீர் எல்லைக்கோடு சட்ட விரோதமானதென்றும், ஈத் பெருநாளுக்குப் பின் எல்லைக்கோடு கடக்கப்படவேண்டும் என்றும் சில பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. ஐ. நா. பாதுகாப்புச் சபையில் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோவின் பேச்சு ராஜதந்திர பரிபாஷைக்கும், அமைதித் தீர்வுக்கும் ஏற்றதாக இல்லையென வெளிவிவகார அதிகாரியொருவர் கூறினார்.

“25 நகரசபைகளை கைப்பற்றுவோம்”

கும்பகோணம், பெப். 6

நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தல்களில் 25 நகரசபைகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றுமென திரு. மு. கருணாநிதி நம்பிக்கைத் தெரிவித்திருக்கிறார்.

“திராவிட நாடு கொள்கையை தி. மு. க. கைவிட்டுவிடவில்லை. ஒத்திவைத்திருக்கிறது. சூழ்நிலையில் திருப்பம் ஏற்படும் போது அது மீண்டும் ஒளி வீசும்” என்றும் அவர் கூறினார்.

நெப்போலியன் வேலையை செய்யாதீர்!

ஹாம்பர்க், பெப் 6

பல காரியங்களை ஏககாலத்தில் கவனிக்கும் “அஷ்டாவதானிகள்” உலகிலேயே ஒரு சிலர்தான் இருக்கிறார்கள். இவர்களை விரல்விட்டு எண்ணிவிட முடியும். நெப்போலியன் பல காரியங்களை ஏக காலத்தில் செய்யக்கூடியவர் என்பது அநேகம் பேர்களுக்குத் தெரிந்திராது. அவர் ஏககாலத்தில் நான்கு கடிதங்களுக்கு விஷயத்தைச் சொல்லக் கூடியவர்.

இக்காலத்தில் ரேடியோவைக் கேட்டுக்கொண்டே படிப்பது சர்வசாதாரணமாக எல்லோரும் செய்கிறார்கள். பத்திரிகையைப் படித்துக்கொண்டே டெலிபோனில் பேசுகிறார்கள். இப்படி செய்வது மூலம் நரம்புகளுக்கு எவ்வளவு தீங்கு செய்கிறார்கள் என்பதை இவர்கள் கவனிப்பதில்லை. இம்மாதிரி பல காரியங்களை ஏக காலத்தில் செய்பவர்கள் வெகு சீக்கிரத்தில் நினைவு சக்தியை இழந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

மூளைக்கு அதிகமாக வேலை அளவுக்கு மீறி கொடுப்பது நரம்புத்தளர்ச்சியில் கொண்டுபோய் விடும். மேற்கு ஜெர்மன் ஆராய்ச்சியாளர் கோஷ்டி இந்த உண்மையை தங்கள் யாதாஸ்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு கிராமபோன் ரிக்கார்டை ஓடவிட்டுவிட்டு ஒருவர் அதைக் கேட்கும்படி செய்யப்பட்டார். பின்னர் இருவர் அவரிடம் பேச்சுக் கொடுத்தனர். ஒருவர் அவரிடம் “ரிக்கார்டை மிகக் கவனமாகக் கேளுங்கள்” என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். மற்றொருவர் பல கேள்விகளைக் கேட்டு “என் கேள்விக்குச் சரியான பதிலை சொல்லிக்கொண்டே இருங்கள்” என்றார். சோதனைக்குட்பட்டவர் ரிக்கார்டையும் கேட்டுக்கொண்டே சில நிமிடங்கள் வரை கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லிக்கொண்டே வந்தார். சிறிது நேரம் கழித்து சுலபமான கேள்வியைக் கூட அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக அவர் ஊன்றிக் கவனிக்க ஆரம்பித்தாரோ அவ்வளவுக்கவ்வளவு அவருக்கு மயக்கம் ஏற்பட ஆரம்பித்தது. அவருக்கு நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

அதிகமாக செயலில் ஈடுபடுத்துவதால் மட்டுமே மூளை குழம்பி விடுகிறது என்பது மட்டுமல்ல. பூரணமான நிசப்தமும் அத்தகைய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். மிகவும் சுகமான மெத்தைப் படுக்கையில் அசையாமல் படுத்திருக்கும்படி சிலர் செய்யப்பட்டார்கள். அறையில் பூரணமான நிசப்தம் ஏற்பட்டது. இச்சோதனைக்குட்பட்டவர்கள் புகைக் கண்ணாடி அணியச் செய்யப்பட்டனர். அவர்கள் கைகளுக்கு கையுறைகள் மாட்டப்பட்டன. சிறிது நேரம் இவர்கள் மிக சுகமாக தூங்கினார்கள். ஆனால் சீக்கிரமே தூக்கத்தில் பிதற்ற ஆரம்பித்தனர். ஆனால் அவர்கள் மூளை சரியாக வேலைசெய்ய மறுத்துவிட்டது. இவர்கள் மூளை குழம்பிப் போனதில் மிக சாதாரண கூட்டல் கூட இவர்களால் போட்டு விடை கூறமுடியவில்லை. சிலர் 6 நாட்கள் இம்மாதிரி நிலையில் தாக்குப் பிடித்தார்கள். ஆனால் சிலரால் 24 மணிநேரம் வரை கூட இம்மாதிரி இருக்கமுடிவில்லை. இந்த அறையை விட்டு வெளியேறிய பின்பும் பலமணிநேரம் அவர்களுக்கு தலைவலி நீடித்திருந்தது. அவர்களால் சரிவர நினைத்து எதுவும் செய்யமுடியவில்லை.

‘ஸிக்னல்’ களைக் கவனிப்பவர்களுக்கு இம்மாதிரி மயக்கம் ஏற்படுவதுண்டு. ராடார் திரையில் நீண்ட நேரம் எதுவும் விழாமல் இருந்து பின்னர் ‘ஸிக்னல்’ விழும்போது கண் தெரியாமல் போவதுண்டு. கடும் மூடுபனியில் விமானத்தை ஓட்டிச் செல்லும் விமானிகளுக்கு இம்மாதிரி மயக்கம் ஏற்படுகிறது. மோட்டார் வண்டியை நீண்ட தூரம் ஓட்டுபவர்களுக்கும் இம்மாதிரி மயக்கம் ஏற்படுவதால் விபத்துகள் ஏற்படுவதுண்டு.

கல்வி மந்திரிக்கு இசைப்பட்டதாரிகள் மகஜர்

நல்லூர், வியாழன்

வடபகுதியில் உள்ள வேலையற்ற இசைப்பட்டதாரிகள் சங்கம் கல்வி அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் இந்தியா சென்று சங்கீதம் படித்ததற்குக் கிடைத்த ஒரு தண்டனையாகவே இசைப்பட்டதாரிகள் இப்போது கஷ்டம் அனுபவிப்பதாகத் தெரிவித்துள்ளது.

"பல கஷ்டங்களுக்கிடையே கல்வி இலாகாவின் அனுமதியுடன் இந்தியா சென்று 4 வருடங்கள் சங்கீதம் பயின்று இங்கு திரும்பி பல வருடங்களாகியும் இதுவரையும் எந்தவிதமான வேலையும் கிடைக்கவில்லை. படிப்பிப்பதற்குக் கஷ்டப்பட்ட நமது பெற்றோர் நாம் வேலை எதிலும் சேரமுடியாமல் இருப்பதால் பெரிதும் வேதனை அடைந்துள்ளனர். நமது கஷ்டங்களை விரைவில் தீர்த்து வைக்கக் கூடியவகையில் நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும்" என்று வேலையற்ற இசைப்பட்டதாரிகள் சங்கம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

வேலையற்ற இசைப்பட்டதாரிகள் சங்கத் தூதுகோஷ்டி ஒன்று உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் உதவி வித்தியாதிபதி திரு. வி. துரைசிங்கத்தைப் பேட்டி கண்டது.

உதவி வித்தியாதிபதி திரு. துரைசிங்கம் தன்னைச் சந்தித்த தூதுகோஷ்டியினரிடம் 'அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைமூலம் பயிர் வளர்க்கிறார்களே' என்று குறிப்பிட்டபோது உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் "அங்கு பயின்ற இசைப்பட்டதாரிகள் இங்கு தம்மை வளர்க்க முடியாமல் கஷ்டப்படுகிறார்களே!" என்று சொன்னார்.

கல்வி அமைச்சர் திரு. பி. பி ஜி. கலுகல்ல மாணவ ஆசிரியர்கள் நியமனத்தின் போது இசைப்பட்டதாரிகளுக்கு இடமளிக்கும்படி புதிய உத்தரவு ஒன்றினைப் பிறப்பித்துள்ளதாகவும், விரைவில் இசைப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

காஷ்மீரில் . . .

(-3ம் பக்கத் தொடர்ச்சி)

முயன்றது. இப்போது அது மீட்கப்பட்டு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. தனது முயற்சியில் தோல்வி அடைந்த பாகிஸ்தான், இப்போது கிழக்கு பாகிஸ்தானில் வகுப்புக் கலவரத்தைத் தூண்டி விட்டது.

இந்தியாவைச் சகல வகையிலும் எதிர்ப்பதே பாகிஸ்தானின் வெளி நாட்டுக்கொள்கையின் அடிப்படை.

இந்தியா ஓர் இனத்தினருக்கு மட்டும் சொந்தமான நாடல்ல. 5 கோடி முஸ்லிம்கள் வசிக்கும் இந்தியா 3-வது பெரிய முஸ்லிம் நாடாகும். பல இனங்களுக்கு அது சொந்தமானது. அங்கு எல்லாப் பதவிகளையும் வகிக்க முஸ்லிம்களுக்கு உரிமையுண்டு. முஸ்லிம்கள் இந்தியாவில் உயர்பதவி வகிக்கிறார்கள்.

எங்களுக்கு அரசாங்க மதம் எதுவும் கிடையாது. முதல்தர, இரண்டாந்தர பிரஜா உரிமையும் எங்களிடையே இல்லை. பல மொழி, பல இனங்கள் வாழும் மத சார்பற்ற நாடு எங்கள் நாடு."

திரு. சாக்ளா மேலும் கூறியதாவது:-

"இந்திய-பாகிஸ்தான் உறவுக்குத் தடையாக காஷ்மீர் மட்டும் இருக்கவில்லை. இந்தியாவை வெறுக்கும் பாகிஸ்தான் கொள்கையே இதற்குக் காரணம். இந்தியா பலவீனமடைய வேண்டும் என்பது பாகிஸ்தானின் நோக்கம். அப்படிப்பலவீனமடைந்தால் தான் காஷ்மீரில் ஆக்கிரமிப்புச் செய்யலாம் என்பது அதன் நோக்கம்.

இந்தியாவுக்கெதிரான சீனாவின் சதியில் பாகிஸ்தானும் பங்கு கொண்டு உழைத்து வருகிறது. சட்ட விரோதமாக காஷ்மீரில் 2000 சதுர மைல் பிரதேசத்தை அது சீனாவுக்கு அளித்திருக்கிறது. எல்லை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ பீகிங் சென்றார்.

ஆசியாவில் சீனாவின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த இந்தியாவுக்கு மட்டுமே சக்தியுண்டு.

இந்தியா இதில் தோல்வியுற்றால் சீனாவின் பிரதேச விஸ்தரிப்புக்கு எவராலும் முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

காஷ்மீர் நிலைமை எவருக்கும் தெரியும். அங்கு வருடம் 70,000 உல்லாசப்பிரயாணிகள் விஜயம்செய்கிறார்கள். முஸ்லிம்கள் கொடுமைப்படுத்தப்படுவதாகக் கூறுவது பொய்யானது. பாகிஸ்தான் முஸ்லிம்கள் கூட இந்தியாவுக்கு வருகிறார்கள் என்பதே இதை நிரூபிக்கும்.

பாகிஸ்தான் பிரதிநிதிக்கு இதுவெல்லாம் தெரியாதிருக்கலாம், அல்லது வேண்டுமென்றே இதை மறைக்கலாம்."

'குறிக்கோள் ஒன்று'

காலி, வியா.

'தெற்கில் அரசியல் புத்துயிர் பெற்று வருகிறது' என காலி எம். பி. டாக்டர் டபிள்யு. தகநாயக்கா குறிப்பிட்டார்.

கவர்னர் ஜெனரலுக்கும் பிரதமருக்கும் காலியில் அளிக்கப்பட்ட இரவு விருந்தின் போது உரை நிகழ்த்துகையிலேயே காலி எம். பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"பார்லிமெண்டிலுள்ள மிக அழகான எம். பி. ஹினிதும எம். பி. திரு. ஹென்றி திஸநாயகா, திறமை வாய்ந்த எம். பி. அம்பலாங்கொடை எம். பியான திரு. பி. டி' எஸ். குலரத்ன எல்லோராலும் விரும்பப்படும் தொழில் மந்திரி திரு டி. எஸ். குணசேகரா ஹபரது தொகுதியின் எம். பி. வீண் பேச்சுக்குப் பெயர்போன நான் காலித்தொகுதி எம்.பி. இதுபற்றியெல்லாம் தெற்கு பெருமைப்படலாம்.

இவர்களெல்லோருக்கும் பொதுவான விஷயமொன்று இருக்கிறது. மக்களின் நலனுக்காக உழைப்பதுவே அது."

கிராமசபை இடைத்தேர்தல்

புங்குடுதீவு, வியா.

புங்குடுதீவு கிராமச்சபையின் 3-ம் வட்டாரத்திற்கான இடைத்தேர்தல் இம்மாதம் 15-ம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இவ்வட்டார முன்னாள் அங்கத்தவரான ஆசிரியர் திரு. க. ச. சபாரத்தினம், பாடசாலையை ஆரசாங்கம் பொறுப்பெற்றுக் கொண்டதனால்; தனது அங்கத்தவர் பதவியை ராஜினாமாச் செய்தார். இவ்விடைத் தேர்தலில் மும்முனைபபோட்டி நடைபெறுகிறது.

இலவச தீட்சை

சண்டிருப்பாய், வியா.

சட்டிருப்பாய் சீரணி நாகம்மை ஆலயத்தில் பலருக்கு இலவச தீட்சை வழங்கப்பட்டது. பொதுஜன சேவைச் சங்க ஆதரவில் நடைபெற்ற வைபவத்தில் திரு. கணேசசுந்தரன் "மங்கையர்க்கரசியாரும் சைவசமயமும்" என்னும் பொருள் பற்றிப் பேசினார். நல்லூர் தெற்கு கற்பக விநாயகராலய பிரதமகுரு ஞானசேகரக்குருக்கள் இலவச தீட்சையை நடத்தினர். பொது சேவைச் சங்கக் காரியதரிசி திரு இராசரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

வழக்கறிஞர் சிவசுப்பிரமணியம்

வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. வை. சிவசுப்பிரமணியம் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறந்த குடும்பத்தைச் சார்ந்தவர். அவருடைய தந்தையார் திரு. க. வைத்தியலிங்கம் யாழ்ப்பாணம் 'உவாட் அன்ட் டேவி' நாவலா கோட்டத்து மலாயன் பென்ஷனர் ஆகும். இவருடைய பேரனர் 'அபிதான கோசம்', 'பாரதச் சுருக்கம்', 'ஆங்கில-ஆங்கில-தமிழ் அகராதி' முதலிய நூல்களின் ஆசிரியருமான திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ஆகும்.

திரு. சிவசுப்பிரமணியம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலே தமது கல்வியைக் கற்று 1942-ம் ஆண்டு தொடக்கம் வழக்கறிஞராகக் கடமையாற்றத்தொடங்கினர். அவர் வழக்கறிஞராக 21 வருடங்கள் தமது கடமையைத் திறம்பட ஆற்றியுள்ளார். அவர் சைவச் சான்றோராகவும், எவருக்கும் இன்முகம் கொடுத்தும், இனிய வார்த்தை பேசியும், எதையும் மன்னித்து நடக்கும் சுபாவமும் உள்ளவர். தமிழ் நாட்டில் உள்ள தேவாரங்களிலே கூறப்படும் தலங்கள் யாவற்றையும் அவரும், அவருடைய பாரியாரும் தரிசித்துள்ளனர். பல வட இந்தியத் தலங்களுக்கும் சென்றிருக்கின்றனர். அவர், தம் மனைவி, இரு புத்திரர், நான்கு சகோதரர்கள், மூன்று சகோதரிகளை விட்டு இறைவன் பாதம் நண்ணியுள்ளார்.

வை. மு.

கத்தோலிக்க கழகங்களின் விளையாட்டுப் போட்டி

சுன்னாகம், வியா.

'நாஸ்திகம் வளரும் இக்காலத்தில் கத்தோலிக்க இளைஞர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொண்டு தலைமறைவில் இருப்பின் எதிர்காலத்தில் விமோசனம் கிடையாது என்று கத்தோலிக்க கழகங்களின் விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திரு. ஏ. ஜ. எல். யோசப குறிப்பிட்டார்.

•

உரும்பிராய் மீசாமைச் சேர்ந்த ஆறு கோவில்பற்று கத்தோலிக்கக் கழகங்களின் விளையாட்டுப்போட்டி சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை உரும்பிராய் அரசினர் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. சுன்னாகம் கட்டளைக் குரவர் வண. கொன்சன்டைன் அடிகளாரும் ஏழாலை, சூராவத்தை மீசாமைச்சேர்ந்த வண. குணரத்தினம் அடிகளாரும் இப்போட்டியின் விருந்தினராகக் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற கழகங்களின் விபரம் வருமாறு:

உரும்பிராய் சென். மைக்கேல் கழகம, சென். இசிதோர் கழகம் ஏழாலை, சென். சவேரியார் கழகம் குழமங்கால்.

தென்னடி விளையாட்டுக்கழகம் கரவெட்டி, சென். அமலோற்பவ கழகம் கோப்பாய், சென். அன்ரனீஸ் கழகம் சுன்னாகம் ஆகியவையும் போட்டியில் கலந்துகொண்டன.

டாக்டர் ஏ. ஜ. எப் யோசப் பரிசில்களை வழங்கினர்.

ஆதரவு தேடுகின்றனர்

வல்வெட்டித்துறை, வியா.

கட்டைவேலி கிராமசபையின் தலைவர் தெரிவு சமீபித்துக் கொண்டிருப்பதால் இப்போட்டியில் பங்கு கொள்ளவிருப்பவர்கள் ஆதரவு தேடுவதில் ஈடுபட்டுள்ளனர். இப்பொழுது ஐந்து அங்கத்தவர்கள் தலைவர் பதவிக்கு ஆதரவுதேடி வருகின்றனர். இச்சபையில் 14 அங்கத்தவர்கள் உள்ளனர்.

தேயிலைக்குப் பதிலாக மரத்தூள் அனுப்பிவைத்தனர்!

உள்நாட்டு மோசடிக்காரர் தேடப்படுகின்றனர்

கொழும்பு, வியாழன்

இலங்கையின் சுத்தமான தேயிலை என்று கூறி நிறமூட்டப்பட்ட மரத்தூளை இரு வெளிநாட்டு வர்த்தக ஸ்தாபனங்களுக்கு இலங்கையைச் சேர்ந்த எவரோ அனுப்பி சர்வதேச மோசடி ஒன்றில் ஈடுபட்டதுதெரியவந்துள்ளது. இவ்வித மோசடியில் ஈடுபட்டவர் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் சி. ஐ. டி. யினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

குவாய்த், சோமாலிலாந்து ஆகிய இரு நாட்டுப் பத்திரிகைகளில் இலங்கைத் தேயிலை வாங்குபவர்களை 'ரெண்டர்' விண்ணப்பம் கோரி விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

இலங்கை விலாசமும் விளம்பரங்களில் பிரசுரிக்கப்பட்டிருந்ததால் இதைக் கண்டதும் இரு நாடுகளிலும் உள்ள வெவ்வேறு வர்த்தக ஸ்தாபனங்கள் ரெண்டரை அனுப்பி தபால் மூலம் தொடர்பு கொண்டு தங்கள் நாட்டில் உள்ள வங்கிகள் மூலம் பணத்தையும் செலுத்தின. தேயிலை இரு நாடுகளிலும் இறக்கப்பட்டு பிரித்துப் பார்க்கப்பட்டதும் அவற்றுள் மரத்தூள்களே காணப்பட்டது. ஒவ்வொரு நாட்டு வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் அனுப்பப்பட்ட பெட்டிகளில் ஏழரைச் சதவிகிதமே தேயிலை காணப்பட்டது. இதனல் இரு வெளிநாட்டு வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் 100,000 ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

இவ்வித சர்வதேச மோசடியில் ஈடுபட்டவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில் சி. ஐ. டி. யினருக்கு உதவும் பொருட்டு குறிப்பிட்ட வர்த்தகஸ்தாபனங்களில் ஒரு நாட்டு ஸ்தாபனப்பிரதிநிதி இலங்கை வந்துள்ளார். இந்த ஸ்தாபனத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்ட தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொண்டதும் அது மின்சார இலாகாவெனத் தெரியவந்தது. மோசடியில் ஈடுபட்டவர்களை கண்டுபிடிப்பதில் முதல் முயற்சியாக சி. ஐ. டி. யினர் வங்கிகள் சிலவற்றுடன் நேற்றுத் தொடர்பு கொண்டனர்.

சுதேசவைத்தியருக்குவரிவிதிக்கும் முடிவுக்கு ஆட்சேபம்

பருத்தித்துறை, வியா.

சுதேச வைத்தியர்களுக்கு வரிவிதிப்பதென்ற பருத்தித்துறை நகரசபையின் முடிவை ஆட்சேபித்து வைத்தியர்கட்கு வரிவிலக்களிக்கவேண்டுமெனக் கோரும் மகஜரொன்றை வடமராட்சித் தமிழ் வைத்தியர் சங்கம் நகரசபைத் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ளது.

வைத்தியர் சங்கச் செயலாளர் திரு. எம். கே. அருளானந்தத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இந்த மகஜரில், தமிழ் வைத்தியர்கள் தமது தொழிலை ஒரு சேவையாகச் செய்துவருகிறார்களேயொழிய வியாபார நோக்கத்துடன் செய்பவர்கள் அல்ல எனக் கூறியிருப்பதுடன் தற்போதைய அரசாங்க சுதேச வைத்தியத்தை வளர்க்க முயற்சி எடுத்துவருவதுடன் பல ஸ்தலஸ்தாபனங்கள் ஆங்காங்கே பல நன்கொடைகளையும் வழங்கி உதவிவரும்வேளையில் இந்தமுடிபுக்கு நகரசபை வந்திருப்பதையிட்டு சங்கம் கவலை அடைவதாயும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் ஸ்தலஸ்தாபன ஆணையாளர், அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவசியம் ஏற்படின் அவர்களை நேரில் கண்டு பேசுவதற்கும் சங்கம் விரும்புவதாகக் கூறப்பட்டுள்ளது.

மகாசபை மகாநாடு ஏப்ரலில்நடைபெறும்

யாழ்ப்பாணம், வியா.

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பொது நிர்வாகசபைக் கூட்டம் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் யாழ்ப்பாணம் சேணிய தெரு மெதடிஸ் மிஷன் பாடசாலையில் நடைபெற்றது.

மகாசபையின் 21-வது மகாநாட்டை எதிர்வரும் சித்திரை மாதம் 26-ம் திகதி நடாத்த வேண்டுமென்றும், முன்னைநாள் மகாசபையின் நிர்வாகக் காரியதரிசி திரு. கே. பசுபதி தைமாதம் 18-ம் திகதி நடைபெற்ற பொது நிர்வாகசபைக் கூட்டத்தில் தலைவரின் கட்டுப்பாட்டுக்கு அமையாது நடந்துகொண்டதினால் இருவருடங்களுக்கு மகாசபையில் ஒரு சாதாரண அங்கத்தவராகக் கூட வைத்திருக்கப்படாதென்றும், நகரசுத்தித் தொழிலாளரின் தேநீர்க்கடைத் திறப்பு தீர்மானத்தை வரவேற்று ஆதரிப்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிர்வாகக் காரியதரிசி திரு. எஸ். செல்லையா அறிக்கை வாசித்தார்.

எருது திருடியவர்களுக்கு அபராதம்!

பருத்தித்துறை, வியா.

செல்லையா ஐயர் இராசலிங்க ஐயர் என்பவரது 750 ரூபா மதிப்புடைய எருது ஒன்றைத் திருடியதாக நெருடாவிலைச் சேர்ந்த குட்டி சின்னவி, வேலுப்பிள்ளை செல்லக்கண்டு ஆகிய இருவர் மீதும் குற்றம்சாட்டப்பட்டு பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு ஏ. வைத்தியலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது நீதிபதி இரு எதிரிகட்கும் தனித்தனியே 100 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பு வழங்கினர்.

'மனிதாபிமானத்துடன் தீர்த்து வைக்கவும்'

கண்டி, வியாழன்

வேலையற்றிருக்கும் தமிழ் பட்டதாரிகள் அண்மையில் கல்விமந்திரியைப் பேட்டி கண்டபோது, அவர்களை காணுவுக்குச் செல்லுமாறு கல்வி மந்திரி கூறியதை ஆட்சேபித்து இலங்கை பல்கலைக்கழக மாணவர் சங்கம் தீர்மானம் இயற்றியுள்ளது. சங்கக் காரியதரிசி திரு. பி. டி. நித்தியபாலாவினால் பிரேரிக்கப்பட்டு சங்க உபதலைவர் செல்வி ஜே. வெலிக்கலவினால் ஆமோதிக்கப்பட்ட ஆட்சேபத் தீர்மானம் பின்வருமாறு:-

வேலையற்றிருக்குத தமிழ் பட்டதாரிகள கல்வி அமைச்சரை அவரின் காரியாலயத்தில் பேட்டி கண்டபோது கல்வி மந்திரி போக்கும் அவரது பொறுப்புணர்ச்சியற்ற சொற்களும் சபைக்கு பெரும் துக்கத்தைக் கொடுக்கின்றது. மந்திரியின் இவ்வித போக்கை கண்டிக்கும் இச்சபை தமிழ்பட்டதாரிகளின் பிரச்னையைத் தீர்ப்பதில் பாகுபாடில்லாத முறையிலும், மனிதாபிமானத்துடனும் தீர்த்துவைக்குமாறு மந்திரியைக் கேட்டுக்கொள்கிறது". இத்தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முஸ்லிம் முன்னணி அமைக்கப்பட்டது

திருக்கோணமலை, வியாழன்

"இஸ்லாமிய ஐக்கிய முன்னணி என்ற பெயருடன் அரசியல் சார்பில்லாத முன்னணி ஒன்று திருக்கோணமலையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இஸ்லாமிய சமூகத்தின் முன்னேற்றம், முற்போக்கடையாத கிராமங்களை முன்னேற்றுவது, மக்களை கொள்ளையடிப்பவர்கள், லஞ்சம் வாங்குபவர்கள், மோசடி செய்பவர்கள் ஆகியோரை கண்டுபிடித்து வேண்டிய நடவடிக்கை எடுத்தல், மக்களை ஒற்றுமையாக்குவது போன்ற முக்கிய இலட்சியங்களுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த முன்னணிக்கு திரு. எம். ஈ. எச். முகமதலி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

பெல்ஜியம் மன்னர்

பிரஸ்ஸல்ஸ், பெப். 6

தற்போது தூரகிழக்கு நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து வரும் பெல்ஜியம் மன்னர் தம்பதிகள் தாயகம் திரும்பும் வழியில் ஜோர்டான், இஸ்ரேல் ஆகிய புனித நாடுகளுக்கு விஜயம் செய்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.

வானொலிநிகழ்ச்சிகள்

வெள்ளி 7-2-64

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 இஸ்லாமியசிந்தனை 7-15 தோத்திரப்பாடல்கள் — பரிமளாதேவி விவேகானந்தா, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 திரை இசை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-10 விலைவாசிகள், 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 5-45 ஞானாஞ்சலி.

இரவு 7-15 பாட்டு — ஞானம் சந்தானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனம், 9-30 நேயர்விருப்பம், 10-15 தேர்ந்தஇசை.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 காந்திஅஞ்சலி, 7-30 எம். கணேசன், எம். கண்ணன் — நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 5-15 எம். கணேசன், எம். கண்ணன் — நாகஸ்வரம்.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 பொங்கி எழும் பாரதம் — சித்திரம், 7-45 ராதா—ஜயலக்ஷ்மி — பாட்டு, 9-15 குரல் இசை, 9-30 மெல்லிசை, 9-45 பலகணி, 10-00 திரைப்பட இசை.

உ த வி!

PARKER
SUPER Quink

எழுதத் தயங்கும் [illegible] பேனைக்கு ஒரு [illegible] உதவி! அதுதான் பார்க்கர் சுப்பர் குயிங்க் — சகல பேனைகளுக்கும் சாலச் சிறந்ததொரு மை. சுப்பர் குயிங்கில் எழுதும் போதே பேனையை சுத்திகரிக்கவும் அடைசலை அப்புறப்படுத்தவும் வல்ல சொல்வ - X உண்டு.

இது ஒரு
பார்க்கர் பேனை
கம்பனியின் உற்பத்தி
உலகினரால் அதிகமாக நாடும் பேனைகளைத்
தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.

சமயப்பிரசங்கங்கள்

இன்று மாலை 6-45 முதல் இரவு 8 மணிவரை நல்லூர் தேவஸ்தான அறங்காவலரின் ஆதரவில் அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க சமயப் பிரசார சபையினரால் நடாத்தப்படும் பிரசங்கத்தொடரில் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் சமயப் பிரசாரகர் திரு. சி. தம்பிஐயா "சமயத்தத்துவங்கள்" என்னும் பொருள் பற்றியும், மேற்படி சங்கச் சைவசமய அபிவிருத்திச் சபையின் ஆதரவில் காலை 8-45 முதல் 9-45 வரை ஆசிரியை ஸ்ரீமதி குணசுந்தரி துரைசிங்கம் "செம்மனச் செல்வி" என்னும் பொருள் பற்றியும், வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தான காவலரின் ஆதரவில் தேவஸ்தான மண்டபத்தில் அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்க ஆதரவில் மாலை 6 மணி முதல் 7 மணிவரை சைவப் புலவர் திரு. வ. கந்தசுவாமி "மணிவாசகரும் திருவாசகமும்" என்னும் பொருள் பற்றியும் மேற்படி சங்கச் சைவ சமய இளைஞர் மன்ற ஆதரவில் மாலை 7 முதல் 8 வரை நல்லூர் கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் திரு. ச. சதாசிவம் "சிவராத்திரி" என்னும் பொருள் பற்றியும் பிரசங்கங்கள் நடத்தவிருக்கிறார்கள்.

நல்லூர் பஜனைச் சபை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் பஜனைச் சபையினர் இன்று மாலை 5-15 முதல் 6 மணிவரை நல்லூர் தேவஸ்தானத்திலும், மாலை 6 மணி முதல் 7 மணிவரை சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலும், இரவு 7 மணிமுதல் 8 மணிவரை வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்திலும் பஜனைசெய்யவிருக்கிறார்கள்.

சனசமூக நிலைய புது நிர்வாகிகள்

தையிட்டி, வியாழன்

தையிட்டி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. க. வே. சீனிவாசகம் தலைமையில் நடைபெற்றது.

கலைமகள் வாசிகசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: க. வே. சீனிவாசகம், உப தலைவர்: திரு. சி. சிதம்பரப்பிள்ளை, இணைக் காரியதரிசிகள்: திருவாளர்கள் சி. நாகரத்தினம், வ. வேலாயுதம்பிள்ளை, தனாதிகாரி: திரு. த. கந்தவனம். ஆறு பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டம்

பண்டத்தரிப்பு, வியாழன்

பண்ணாகம் வடக்கு அமெரிக்கமிஷன் பாடசாலைப் பெற்றோர்- ஆசிரியர் சங்கக்கூட்டம் மேற்படி பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. அ. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற போது நடப்பு வருட செயற்குழு தெரிவுசெய்யப்பட்டது. தலைமையாசிரியர் திரு. அ. கார்த்திகேசு பேசுகையில், மாணவர்களின் ஒழுக்கத்திற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களுமே முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும் என்றும், ஒரு பாடசாலையின் வளர்ச்சி அக்கிராமப் பெற்றோர்களிலும் பழைய மாணவர்களிலும் தான் தங்கியிருக்கிறது என்றும் குறிப்பிட்டு இக்கல்லூரியின் மேல்நிலைக்கு பெற்றோரும் பழைய மாணவரும் உதவ முன்வரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பண்டத்தரிப்பு வெற்றி

பண்டத்தரிப்பு வியாழன்

பண்டத்தரிப்பு விளையாட்டுக்கழகக் கோஷ்டிக்கும், சண்டிருப்பாய் விளையாட்டுக் கழகக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பண்டத்தரிப்பு 6—0 கோல்களால் சண்டிருப்பாய் கோஷ்டியைத் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு திரு. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

பண்டத்தரிப்பு, வியாழன்

சித்தங்கேணி விளையாட்டுக் கழகத்திற்கும் பணடத்தரிப்பு விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே மூளாய் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா இரண்டு கோல்கள் போட்டு ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்துக்கொண்டன.

நியூ விக்டோரியன் வெற்றி

சண்டிருப்பாய், வியாழன்

சண்டிருப்பாய் நியூ விக்டோரியன் கிளப்புக் கோஷ்டிக்கும் சங்கானை கலைக்கழக கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் நியூவிக்டோரியன் கோஷ்டி 11 விக்கட்டுகளாலும் 4 ரன்களாலும் கலைக்கழகத்தைத் தோற்கடித்தது.

'பழைய பெயர்கள் நல்லது'

மந்திரி கருத்து!

மைலாபிட்டியா, வியா.

'இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கு இருக்கும் பெயர்கள் கிராமங்களிலிருந்தும் நகரங்களிலிருந்தும் பெறப்பட்டவை' என நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன இங்கு நடைபெற்ற தேநீர் விருந்துபசாரத்தின் போது பேசுகையில் கூறினர்.

திரு. இலங்கரத்ன மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'தற்போதுள்ள கல்வித் திட்டத்தின்படி பாடசாலைகளின் பழைய பெயர்கள் பல மாற்றப்பட்டுள்ளன. ஆனால் கிராமங்களுக்கு அரசர்களால் வைக்கப்பட்டு அதையொட்டி வைக்கப்பட்ட இந்தப்பழைய பெயர்கள் மாற்றப்பட்டிருக்கக் கூடாது.

ஹேவாகெட்ட தொகுதியிலுள்ள பொபிதியாமகா வித்தியாலயம், ராஜசிங்க மகாவித்தியாலயமாக்கப்பட்டது பற்றி மந்திரிக்கு தேநீர் விருந்தில் கலந்து கொண்ட ஒரு தலைமை ஆசிரியர் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சீனி சம்பந்தப்பட்ட விசாரணை

கொழும்பு, வியாழன்

அரசாங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் இருசீனித் தொழிற்சாலைகளில் குறிப்பிட்ட அளவு சீனி உற்பத்தி செய்யப்படாதது குறித்து அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கமிட்டி ஆராயவிருக்கிறது.

கல்லோயாவிலுள்ள ஹிங்குறாணவிலிருக்கும் சீனித் தொழிற்சாலையும் கந்தளாய் சீனித்தொழிற்சாலையுமே மேற்குறிப்பிட்ட இரு தொழிற்சாலைகள்.

முன்னைநாள் ஆடிட்டர்ஜெனரலும் தற்போது நிதி அபிவிருத்திக் கார்ப்பரேஷனின் ஜெனரல் மனேஜருமான திரு. எல். ஏ. வீரசிங்கா இக்கமிட்டியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ராஜ்குமாரி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஸ்ரீமதி ராஜ்குமாரி அமிர்தகௌரி 16 ஆண்டுகள் காந்திஜியின் காரியதரிசியாகவும், 12 ஆண்டுகள் மத்திய சுகாதார மந்திரியாகவும் கடமையாற்றினர்.

பாரத செஞ்சிலுவைச் சங்கம், ஹிந்த் குஷ்டநிவாரண சங்கம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிகேட் ஆகியவற்றின் தலைவராக அவர் பதவி வகித்தார். 1950-ம் ஆண்டு உலக சுகாதார சபைத் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அவருக்குத் தங்கபதக்கம் அளித்துக்கௌரவித்தது. ராஜ்யசபை அங்கத்தினராகவும், லோகசபை அங்கத்தினராகவும் அவர் கடமையாற்றியிருக்கிறார்.

சங்கீதத்திலும், விளையாட்டுத் துறையிலும் அவர் பெரும் ஆர்வம்கொண்டார். சிறந்த டென்னிஸ் விளையாட்டுக்காரரும்கூட.

ஐந்து மாதங்களுக்குள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து 4 யார் துணியை வாங்கிக்கொள்ளலாம். 104-ம் இலக்கக் கூப்பன் கிழிக்கப்பட்டிருந்தால் அது செல்லுபடியாகாததுடன் குறிப்பிட்ட 4 யார் துணியும் கிடைக்காமல் போகலாம்.

வெள்ளை பப்ளின், சாயப் பப்ளின், சேட் துணிகள், பிஜாமா, சேலைகள், பிறின்ரட் பெப்ரிக்ஸ், சற்றின், கிறேத் துணி, சாரங்கள் ஆகிய இவற்றில் 4 யார் துணி ஒவ்வொரு கூப்பனுக்கும் வழங்கப்படும். சேலைகள், சாரங்கள் ஆகியன 4 யாருக்கு மேற்பட்டிருந்தபோதிலும் ஒவ்வொரு கூப்பனுக்கும் ஒரு சேலையோ அல்லது ஒரு சாரமோ வழங்கப்படும். சேட்டுக்களையும், துவாய்களையும் கூப்பன் இல்லாமலே பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு, திருக்கோணமலை, காலி ஆகிய துறைமுகங்களில் இறக்கப்படாமலிருக்கும் துணிவகைகளை விரைவில் இறக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதெனவும் மந்திரிசபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. பதில் போக்குவரத்து மந்திரி திரு. டி. எஸ். சமரசிங்காவை திருக்கோணமலை துறைமுகத்துக்குப் போகுமாறும் மந்திரிசபை உத்தரவிட்டது. இவருடன் துறைமுகக் கார்ப்பரேஷன் தலைவரும், புகையிரத இலாகா ஜெனரல் மனேஜரும் செல்வார்கள். நேற்றைய மந்திரிசபைக் கூட்டம் முடிவடைந்ததும் துணிவகைகளை நாட்டின் சகல பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கும்படி உடனடியாக உத்தரவிடப்பட்டது.

துணிவகைகளை விநியோகிக்கவிருக்கும்கடைகள் நாளாந்தம், விற்பனை செய்யப்பட்ட தொகை மிகுதி இருப்பு விற்கப்படும் துணிவகைகள் முதலிய விபரங்களை கடையில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்குமாறு கேட்கப்படுவார்கள்.

தனிப்பட்ட வியாபாரிகள் விற்பனை செய்யும் துணிகளின் தொகையையும் குறைக்க மந்திரிசபை முடிவு செய்தது. இதற்கான சட்டதிருத்தம் பார்லிமெண்டில் வெகு விரைவில் சமர்ப்பிக்கப்படும். தனிப்பட்ட வர்த்தகர்களுக்கு இன்னும் 300 லட்சம் ரூபாவுக்கு துணிவகை இறக்குமதி செய்ய கோட்டாவை அதிகரிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது. அரசாங்கம் இன்னும் 25,000,000 யார் துணிவகைகளை இறக்குமதி செய்ய சீனவுடனும், வேறு நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

1964-ம் ஆண்டில் முதல் ஆறுமாத காலத்துக்கு போதியளவு துணிவகை கிடைக்கக்கூடியதாகவே இம்முறை கையாளப்பட்டு வருவதாகவும் அடுத்த ஆறுமாத காலத்துக்கும் வேண்டிய துணிவகை கிடைக்கக்கூடிய திட்டம் தயாரிக்கப்படும் எனவும் அரசாங்கம் நேற்றிரவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெளிநாட்டு மூலதனத்தில் வீழ்ச்சியடையாமல் பாதுகாத்துக்கொள்வது பற்றியும் மந்திரிசபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

விளம்பரம்

சித்த ஆயுள்வேத வைத்தியர்

நயினாதீவு கிராமசபையால் நடத்தப்படும் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு ஓர் சித்த ஆயுள்வேத வைத்தியர் தேவை.

பதவி: தற்காலிகமானது.

வயது: 25க்கு மேல் 50க்கு உள்.

வைத்தியர்: அரசாங்கத்தில் பதியப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

வேதனம்: ரூ 35-ம் அரசாங்கப்படியும் வழங்கப்படும்.

இரு நற்சாட்சிப்பத்திரங்களுடன் நயினாதீவு கிராமசபைத்தலைவருக்கு 14-2-64க்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவேண்டும்.

தேவையான விஷயங்களை கிராமசபைத் தலைவரிடம் அறிந்துகொள்ளலாம்.

விண்ணப்பக்காரர் 15-2-64 காலை பத்து மணிக்கு மூலப் பிரதிப் பத்திரங்களுடன் சமுகம் தரல் வேண்டும்.

க. வே. பரமலிங்கம்,
தலைவர்,
கிராமசபை நயினாதீவு.
கிராமசபைக் காரியாலயம்,
நயினாதீவு. 1783

மனேச்சர் தேவை

உடுத்துறை ஆழியவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேச்சர் தேவை. பிணைப்பணம் ரொக்கம் 1250/-ரூபா. சம்பளம் 100/-ரூபா, சம்பள உயர்வு உண்டு. மற்றும் வேண்டிய விபரத்திற்கு மனுச்செய்யவும்.

A. K. Ehamparam, Secretary,
M. P. C S. LTD, Uduthurai,
Chempianpattu. 1782

வரி விளம்பரம்

விற்பனை

ஒரு ரயர் நிகுறாவிஸ் மெசின், ஒரு கோம்சார்ஜ்ஜர் புத்தம் புதியது. விபரங்களுக்கு:- பெனின்கலா மோட்டார் வேர்க்ஸ், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 1924

ஸ்ரீ சரவணபவான் கபே சுன்னாகம்

சுத்தமான -சுவையான - சத்துள்ள சிற்றுண்டி - போசனம்- பானங்கள் கிடைக்கும். 1929

வெளிவந்து விட்டது!

கம்பராமாயணம்

(இளமுருகனர் உரைவிளக்கத்துடன்)

கல்விப் பொதுத் தேர்வுக்கு (G. C. E. — O. L.) உரிய அயோத்தியா காண்டம் (மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேயி சூழ்வினைப்படலம்) பண்டிதர் சோ. இளமுருகனர், பண்டிதை இ. பரமேசுவரி ஆகியோருடைய உரைவிளக்கத்துடன் 8-2-64ல் வெளியாகின்றது புத்தகங்கள் தேவைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

செ. யோ. இளையதம்பி,
வனிதா அச்சகம், மூன்றும்
குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
1934

தேவை

இனிப்பு வகைகள் தயார் செய்வதற்கு நன்கு அனுபவம் வாய்ந்த ஒருவரும், இதர வேலைகளுக்கும் ஆட்கள் தேவை. 16 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ராஜா இன்டஸ்ரீஸ், 28/3, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
1935

நயினாதீவுயாத்திரிகர்களுக்கு

ரூ. 60 ஆயிரம் செலவில் அன்னதான மண்டபம்

அத்திவாரக் கல் நாட்டப்பட்டது

நயினாதீவு, வியாழன்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபையினரால் சுமார் அறுபதினாயிரம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட விருக்கும் அன்னதான மண்டபத்திற்கு பிரபலவர்த்தகர் திரு. சி. சின்னத்துரை இன்று அத்திவாரக்கல் நாட்டினார்.

நயினாதீவு, கிராம சபைத் தலைவரும் மேற்படி அன்னதானசபை இணைக் காரியதரிசியுமாகிய திரு. க. வே. பரமலிங்கம் அப்போது பேசியதாவது:

"சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்களுக்கு போதிய உணவு வசதியற்று துன்பப்படுவதை அறிந்த நயினாதீவு மக்கள் யாத்திரிகர்களுக்குச் சிறந்த முறையில் அன்னதானம் வழங்க வேண்டுமெனத் தீர்மானித்து ஓர் சபையை நிறுவினார். மேற்படி சபையினர் இப்பெரும் கைங்கரியத்தை எவ்விதம் செய்யலாமென ஆலோசித்த போது அம்பிகையின் திருவருள் கூட்ட வணிகப் பெருமக்களின் உதவியை நாடினால்தான் இப்பெரும் தரும கைங்கரியத்தை செய்து முடிக்கலாமெனத் தீர்மானித்தனர்.

அன்பர்கள் உதவிய நிதியில் அன்னதான தொண்டுக்கு செலவழிந்தது போக எஞ்சியுள்ள கணக்கில் அன்னதான மண்டபம் நிரந்தரமாக அமைப்பதற்கு ஒரு காணியை விலைக்கு வாங்கியுள்ளார்கள். மேற்படி காணியில் ஓர் அழகிய மண்டபத்தை அமைத்து வருகிற அம்பிகையின் உற்சவ காலத்திலே அம்பிகை அடியார்களுக்கு அன்னதானம் வழங்க வேண்டுமென சபையார் தீர்மானித்து கட்டிட அமைப்பை தயாரித்த போது ரூபா அறுபதினாயிரம் செலவாகுமென மதிப்பிடப்பட்டது.

இளைப்பாறிய கிராமாதிகாரி திரு. கா. ந. சிவசிதம்பரமும் பேசினார். இறுதியில் சிற்றுண்டி விருந்துபசாரமும் நடைபெற்றது.

பதவிநீக்கம்

கொழும்பு, வியாழன்

சிமெந்து கூட்டுஸ்தாபன சபை அங்கத்தவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அங்கத்தவருமான திரு. த. ஜயதேவன சிமெந்து கூட்டுஸ்தாபனத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளாரென்றும் அவர்மீது சுமத்தப்பட்ட பல புகார்களே இதற்குக் காரணமென்றும் அறியப்படுகிறது.

ஓய்வுபெறும் அதிபருக்குப் பாராட்டு

பண்டத்தரிப்பு, வியாழன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபராக இருந்து சமீபத்தில் ஓய்வுபெற்ற திரு ஐ. பி. துரைரத்தினத்திற்கு பண்டத்தரிப்பு உயர்நிலைப் பள்ளியில் விருந்துபசாரம் ஒன்று நடைபெற்றது. அன்னாரது சேவையையும் சமயத் தொண்டையும் விளக்கிப் பலர் பேசினர்.

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) ரீகல் (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
நவா (கொம்பனித்தெரு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோ) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி
எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி,
புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஸ்ரீ. வரலக்ஷ்மி
பி. எஸ். சரோஜா, சம்பந்தம்
மற்றும் பலர் நடிக்கும்

மொடர்ன் தியேட்டர்ஸ்
காட்டு ரோஜா
மதுரமான இசை, அருமையான படப்பிடிப்பு, சிறந்த டைரக்ஷன், குலுங்கக்குலுங்க சிரிக்க வைக்கும் ஹாஸ்யங்கள் அனைத்தும் நிறைந்த உன்னத மலர்ச் செண்டு.
இசை: கே. வி. மகாதேவன்

ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க புதிய குமாஸ்தா நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகர் காரியாலயத்தில் சிங்களக் கடிதங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவோ சிங்களக் குறிப்புகளுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு இணைக்கவோ மறுத்து சமீபத்தில் வெளிநடப்புச் செய்து மீண்டும் அமைச்சின் உத்தரவின் மீது வேலைக்குத் திரும்பிய ராஜ்ய லிபிகாரு சங்கத்தைச் சேர்ந்த ஆறு சிங்களக் குமாஸ்தாக்களில் ஒருவர் விரைவில் அங்கிருந்து இடமாற்றம் செய்யப்படுவாரென்றும் பெரும்பாலும் அவர் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு மாற்றம் செய்யப்படக் கூடுமென்றும் அறியப்படுகிறது. இதே சமயம் சிங்களத்தில் எழுதப்படும் கடிதங்களுக்கும் குறிப்புகளுக்கும் ஆங்கில மொழிபெயர்ப்பு செய்வதற்காக புதிதாக ஒரு சிங்கள குமாஸ்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பொழுது யாழ்ப்பாணம் கச்சேரியில் 35 சிங்களக் குமாஸ்தாக்கள் வேலை பார்த்து வருவதாகவும் புதிதாக இரண்டு குமாஸ்தாக்கள் இடமாற்றம் பெற்று வந்திருப்பதுடன் இம்மாதம் 15-ந் திகதியளவில் மேலும் சில குமாஸ்தாக்கள் இங்கு வந்து சேர்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க ஊழியரின் பெயர், பதவி, வயது, அரசகருமமொழியில் பெற்றிருக்கும் தகைமை அரசகரும மொழியில் தேர்ச்சிபெற எடுத்த முயற்சி ஓய்வுக்கான பத்திரங்களை வாபஸ் பெறுமாறு கோரி மனுப்பத்திரம் அனுப்பப்பட்ட திகதி ஆகிய விபரங்களை உடனே அனுப்பிவைக்குமாறு திறைசேரிக் காரியதரிசி சகல நிரந்தரக் காரியதரிசிகளையும் இலாகா தலைவர்களையும் கேட்டுள்ளார்.

திறைசேரிக் காரியதரிசி இவர்களுக்கு அனுப்பியுள்ள நிருபத்தில் அரசகரும மொழிச் சட்டத்தின்கீழ் ஓய்வு பெறுவதற்கான முன்னறிவித்தல் பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்கள் தாம் அனுப்பிய இந்தப் பத்திரங்களை வாபஸ்பெற உரிமை இருக்கக் கூடாது எனத் தீர்மானித்திருந்தது. எனினும் ஓய்வு பெறுவதற்கான முன்னறிவித்தல் பத்திரங்களை அனுப்பியவர்கள் தமது முன்னறிவித்தல் பத்திரங்களை வாபஸ்பெறக் கேட்டுக்கொண்டால் அதுபற்றி முடிவு செய்யும் பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்தது. இதுசம்பந்தப்பட்ட முடிவை அரசாங்கம் செய்வதற்காக மேற்படி விபரங்களை இலாகா தலைவர்கள் இன்னும் 10 தினங்களுக்குள் அனுப்பவேண்டும்.

பொருட் காட்சி நீடிக்கப்பட்டது

காலி, வியாழன்

காலி நகரமண்டப வளவில் நடைபெற்றுவரும் விவசாய கைத்தொழில் பொருட்காட்சி சனிக்கிழமைவரை நீடிக்கப்பட்டுள்ளது. நேற்று ஏராளமானவர்கள் இப்பொருட்காட்சியை கண்டுகளித்தனர். சென் அலோசியஸ் கல்லூரியில் நடைபெற்றுவரும் விஞ்ஞான பொருட்காட்சி சனிக்கிழமை வரை நடைபெறும்.

கிழக்கு ஜெர்மன் உதவிப் பிரதமர்

கொழும்பு, வியாழன்

இலங்கையில் ஏழு நாட்கள் தங்கியிருக்கும் பொருட்டு கிழக்கு ஜெர்மன் உதவிப் பிரதமர் நாளை கொழும்பு வந்து சேருவார்.

அரசாங்க எம்.பி.க்கள் பிரதமரை சந்திப்பர்

கொழும்பு, வியாழன்

தற்பொழுது நிலவும் அரசியல் நிலைமை சம்பந்தமாக ஆராயும்பொருட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம். பி.க்கள் அடுத்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் பிரதமரைச் சந்திப்பார்கள். அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து தங்களுக்கு அறிவிக்குமாறு அவர்கள் பிரதமரைக் கேட்டுக்கொள்வார்கள் எனத் தெரியவருகிறது. திடீர் தேர்தல் நடத்துவது சம்பந்தமாக திட்டங்கள் எதுவும் இருக்கிறதா என்பது பற்றியும் அவர்கள் கேட்கவிருக்கிறார்கள்.

வெண்செலாவணி, ஜவுளித் தட்டுப்பாடு, வாழ்க்கைச் செலவு ஆகியவைகள் பற்றியும் இப் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க சம்பந்தப்பட்ட மந்திரிகள் கைக்கொண்டுள்ள திட்டங்கள் பற்றியும் அவர்கள் விவாதிக்கவிருக்கிறார்கள்.

கடற்படை கப்பல்

கொழும்பு, வியாழன்

ரோயல் மலேசிய கடற்படையைச் சேர்ந்த இரண்டு கப்பல்கள் நாளை கொழும்புத் துறைமுகம் வந்துசேரவிருக்கின்றன. இக்கப்பல்கள் இன்று காலை கொழும்பு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கப்பல்கள் இலங்கை வந்துசேரவில்லை.

இந்து மகாசமுத்திரத்தின் வழியாக பல நாடுகளுக்கும் விஜயம் செய்துவரும் இக்கப்பல்களின் காப்டன் இலங்கைத் தமிழரான லெப்டினன்ட் தனபாலசிங்கமாகும்.

திருமண அழைப்பு

வல்வெட்டித்துறை திரு. ம. சி. நடராஜாவும் பாரியாரினதும் புதல்வன் திருநிறைச் செல்வன் சிதம்பரநாதன் (வைத்திய நுண் அறிவு வல்லுநர், அரசினர் ஆஸ்பத்திரி சிலாபம்) அவர்கட்கும், வல்வெட்டித்துறை வாசியும் வனபரிபாலன இலாக்காவில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்து இளைப்பாறிய திரு வீ. சி. குழந்தைவேலுவின் புதல்வி திருநிறைச்செல்வி முத்துரட்ணத்திற்கும் 9-2-64 ஞாயிற்றுக்கிழமை இரவு 10-30 க்கும் 11-17 க்கும் இடையில் வரும் சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும்.

அத்தருணம் உறவினர்களும் சிநேகிதர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

கிழக்குத் தெரு,
வல்வெட்டித்துறை
1936

திருமண அழைப்பு

வல்வெட்டித்துறை வாசியும், வனபரிபாலன இலாக்காவில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்து இளைப்பாறிய திரு. வீ. சி. குழந்தைவேலுவும், அவரின் காலஞ்சென்ற பாரியாரினதும் புதல்வி திருநிறைசெல்வி முத்துரட்ணத்திற்கும், வல்வெட்டித்துறை திரு. ம. சி. நடராசாவும் பாரியாரினதுமுடைய புதல்வன் திருநிறைசெல்வன் சிதம்பரநாதன் (வைத்திய நுண் அறிவு வல்லுநர் அரசாங்க ஆஸ்பத்திரி சிலாபம்) அவர்கட்கும், மணமகள் இல்லத்தில் (ஞானதெனி, வல்வெட்டித்துறை) 9-2-64 ஞாயிற்றுக்கிழமை இரவு 10-30 க்கும் 11-17 க்கும் இடையில் திருமணம் நடைபெறும்.

உறவினர்களும் சிநேகிதர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

1937



இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது